ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ

(மாதப் பத்திரிகை.)



15 AUG 1936
MADRAS

பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,

(... ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

... ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்

பிரசுரம் செய்யப்படுவது.

1936-ஹு ஆகஸ்டு-மீ [ ஆவணி-மீ

JL
[illegible] 11, N3551
N36 '2.8.
189397

## விஷயம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | தயாசதகம் | [தொடர்ச்சி] | 89—104 |
| 2. | கோதாஸ்துதி | [தொடர்ச்சி] | 15—22 |
| 3. | ப்ரமாபநோதிநீ | [தொடர்ச்சி] | 17—20 |
| 4. | ஸதாசார்யஸம்ரக்ஷாவிமர்சம் | | 1—8 |




𑌖𑌿𑌲𑌂 𑌚𑍇𑌤𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 𑌕𑌿𑌮𑌿𑌦𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌸𑍍𑌮𑍇𑌰𑌭𑍁𑌵𑌨𑌂
𑌕𑍃𑌪𑍇 𑌸𑌿𑌂𑌹𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍁𑌖𑌚𑌮𑌤𑍍𑌕𑌾𑌰𑌕𑌰𑌣𑌮𑍍 ।
𑌪𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌬𑌲𑌵𑍃𑌜𑌿𑌨𑌪𑍍𑌰𑌾𑌭𑍃𑌤𑌭𑍃𑌤𑌾𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌗𑌰𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌟𑌕𑌜𑍁𑌷𑌃 ॥

கிலம் சேதோவ்ருத்தே: கிமிதமிதி விஸ்மேரபுவநம்
க்ருபே ஸிம்ஹக்ஷ்மாப்ருத் க்ருதமுகசமத்காரகரணம் I
பரந்யாஸச்சந்நப்ரபலவ்ருஜிநப்ராப்ருதப்ருதாம்
ப்ரதிப்ரஸ்தாநம் தே ச்ருதிநகரச்ருங்காடகஜுஷ: II

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே, 𑌪𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌬𑌲𑌵𑍃𑌜𑌿𑌨𑌪𑍍𑌰𑌾𑌭𑍃𑌤𑌭𑍃𑌤𑌾𑌂 - சரணாகதி (பரத்தை ஒப்புவிக்கிறது) என்கிற ஓர் ஆவரணத்தால் மேலே மூடப்பட்ட ப்ரபலமான பாபங்கள் என்னும் உபஹாரத்தைக் கொணருகிறவர்களை உத்தேசித்து, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌗𑌰𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌟𑌕𑌜𑍁𑌷𑌃 - வேதமென்னும் பட்டணத்தில் நாச்சந்தியில் நிற்கும், 𑌤𑍇 - உன்னுடைய, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 - எதிர்கொண்டு வரவேற்பது, 𑌚𑍇𑌤𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 - புத்திவ்ருத்தியினுடைய, 𑌕𑌿𑌮𑌿𑌦𑌂 𑌖𑌿𑌲𑌂 - இது என்ன ஓட்டை, (மறதி) 𑌇𑌤𑌿 - என்று, 𑌵𑌿𑌸𑍍𑌮𑍇𑌰𑌭𑍁𑌵𑌨𑌂 - ஆச்சர்யப்படும் உலகத்தை உடையதாயும், 𑌸𑌿𑌂𑌹𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍁𑌖𑌚𑌮𑌤𑍍𑌕𑌾𑌰𑌕𑌰𑌣𑌮𑍍 - வேங்கடமலை வித்வானாகிய ஸ்ரீநிவாஸனுக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குவதாயும் (இருக்கிறது).

"சரணாகதி (சுமையை அங்கீகரிக்கப் பிரார்த்திப்பது) என்ற ஆவரணத்தால் (மூடியால்) கொடுமையான ஏராளமான பாபம் என்கிற உபஹாரத்தை மூடிவந்து நிற்பவரை உத்தேசித்து அதைப் பெற்றுக்கொள்ள நீ அவர்களை நோக்கிச் செல்வதானது "இது என்ன மனோவ்யாபாரத்திற்குச் சூன்யதை! இது என்ன மறதி!" என்று உலகத்திற்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் ஆச்சர்யத்தை உண்டுபண்ணுகிறது".

(தா-ம்) சரணாகதியின் பலம் நாம் செய்த கோடிக்கணக்கான பெருங் குற்றங்களை ஸர்வஜ்ஞனும் ஒருகாலும் மறதி என்பதே இல்லாதவனுமான ஈச்வரன் அடியோடு அனாதரிக்கவேண்டும். நம்முடைய கோடிக்கணக்கான பாபங்களின் நினைப்பினால் நிறைந்

18997

திருக்குமவன் [illegible] எல்லாம் அடியோடுமன்னித்து சூந்ய மாகவேணும். தயையினிடத்தில் சரணாகதி செய்த உடன் காலில் ஈச்வரனுடைய மனது சரணாகதனுடைய அபரிமிதமான பாபங்கள் விஷயத்தில் கிலமாகிறது. நன்றாய் நினைத்துக்கொண் டிருந்த எத்தனையோ கணக்கற்ற பாபங்கள் ஒரு க்ஷணத்தில் நம்மை அறியாமல் கழிந்துபோய் மறைந்து ஓடிவிட்டன என்று ஈச்வரனுக்கு ஆச்சர்யம் உண்டாகிறது. இது என்ன! கிலமாயிற்றே மனது என்று அவனும் ஆச்சர்யப்படுகிறான். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் நித்தியஸூரிகளும், முக்தர்களும் இப்படி ஈச்வரன் மனதுக்கு சூந்யதை ஏற்படுவதைக் கண்டு, இதென்ன ஆச்சர்யமென்று விஸ்மிதராகிறார்கள். வேதம் என்னும் பட்டணத்தில் நான்கு மார்க்கங்கள் உண்டு. அவரவர்கள் ருசிக்குத் தகுந்தபடி தர்மார்த்தகாமமோக்ஷங்கள் என்கிற சதுர்விதபுருஷார்த்தங்களையும் ஸம்பாதிக்கும் வழியை வேதம் காட்டுகிறது. இந்த நான்கு புருஷார்த்தங்களும் வேதம் காட்டின உபாயத்தை அநுஷ்டிப்பதால் ஈச்வரனுடைய தயையினால் பெற வேண்டும். அவரவர்களுக்கு வேண்டிய புருஷார்த்தங்களை அளிப்பதற்காக தயாதேவி நான்கு புருஷார்த்தமார்க்கங்களும் சேரும் நாச்சந்தியில் எந்தப் புருஷார்த்தத்தைக் கோறி யார் வரப்போகிறார்களென்று ஸஜ்ஜமாயிருக்கிறாள். மோக்ஷத்தை அபேக்ஷிக்கிறவன் சரணாகதியென்னும் வ்யாஜத்தை வைத்துக்கொண்டு அதனால் தன் பாபங்களை எல்லாம் மறைத்து சரணாகதி என்னும் தர்மத்தை மேலே வைத்து அதை உபஹாரமாகக்கொண்டு தயாதேவியின் ஸந்நிதிக்கு வந்து அதை ஸமர்ப்பிக்க ஆரம்பிக்கிறான், அந்த உபஹாரத்தைப் பெற்றுக்கொள்ள தயாதேவி அவனை நோக்கி முன் செல்கிறாள். இதென்ன ஆச்சர்யம்! கணக்கற்ற பாபங்களைச் சரணாகதி என்னும் ஒரு தர்மலேசத்தால்மூடிக்கொண்டு வந்தால் மூடப்பட்டிருக்கிற அபரிமித அதர்மங்கள் தெரியாமல் போய்விடுமா ? முழுப்பூஷணிக்காயைச் சோத்தில் மறைக்கக்கூடுமா ? தயாதேவி, சரணமடைகிறேன் என்னும் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து, பர்வதக்கணக்கான பாபங்களை அடியோடு பார்க்காமல் மறந்து விடுகிறாளே ! ஸர்வஜ்ஞனான ஈச்வரனும் உடனே ஒரு க்ஷணத்தில் அத்தனையும் கழித்து விடுகிறானே ! இப்படி ஆச்சர்யங்களைக் காட்டி இந்தத் தசகத்தை முடிக்கிறார். (70)



𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑍇𑌮𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌯𑌾𑌮𑌿𑌕𑌾
𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌵𑌿𑌭𑍋𑌰𑌿𑌚𑍍𑌛𑌾 𑌸𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑍈𑌰𑌪𑌰𑌾𑌹𑌤𑌾 ।
𑌕𑍃𑌪𑌣𑌭𑌰𑌭𑍃𑌤𑍍𑌕𑌿𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾
𑌵𑌹𑌸𑌿 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌵𑍈𑌚𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 𑌮𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑌸𑌾𑌹𑌸𑍇 ॥

த்ரிவிதசிதசித்ஸத்தாஸ்தேம ப்ரவ்ருத்திநியாமிகா
வ்ருஷகிரிவிபோரிச்சா ஸா த்வம் பரைரபராஹதா ।
க்ருபணபரப்ருத் கிம்குர்வாணப்ரபூதகுணாந்தரா
வஹஸி கருணே வைசக்ஷண்யம் மதீக்ஷணஸாஹஸே ॥

(ப-ரை) 𑌕𑌰𑍁𑌣𑍇 - தயையே! 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑍇𑌮𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌯𑌾𑌮𑌿𑌕𑌾 - நித்யர், முக்தர், ஸம்ஸாரிகள் என்ற மூவகை சேதனரின் ஸத்தை, ஸ்திதி, ப்ரவ்ருத்திகளை நியமிப்பவளும், 𑌪𑌰𑍈𑌰𑌪𑌰𑌾𑌹𑌤𑌾 - பிறரால் தடுக்கமுடியாதவளும், 𑌕𑍃𑌪𑌣𑌭𑌰𑌭𑍃𑌤𑍍𑌕𑌿𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾 - பேதையான ப்ரபந்நனுடைய பாரத்தைச் சுமக்கும் உனக்கு ஊழியம் செய்யும் அரும்பெரும் மற்ற பகவத் குணங்களோடு கூடியவளாயும், (உள்ள) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌵𑌿𑌭𑍋𑌃 - வேங்கடேசனுடைய, 𑌇𑌚𑍍𑌛𑌾 - இச்சையே ஸ்வரூபமான, 𑌸𑌾 அந்த, 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌮𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑌸𑌾𑌹𑌸𑍇 - என்னைப் பார்க்கிறது என்கிற ஸாஹஸக்ருத்யத்தில், 𑌵𑍈𑌚𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 - ஸாமர்த்யத்தை, 𑌵𑌹𑌸𑌿 - வஹிக்கிறாய்.

"கருணையே! மூன்றுவிதமான சேதனா சேதனங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளை நியமனம் செய்பவளாயும், வேங்கடாசலபதியினுடைய திருவுள்ள ஸ்வரூபமாயும், பிறரால் தடுக்கக் கூடாதவளாயும், ஸர்வலோகப்ரஸித்தமாயும், அநாதஜனங்களுடைய யோக க்ஷேமபாரத்தை ஹரிக்கிறவளாயும், பகவானுடைய மிகச்சிறந்த மற்ற குணங்கள் உனக்கு ஊழியம்செய்யப்பெற்றவளாயும், இருக்கும் நீ (மிகக் கொடிய) என்னையும் பார்க்கிறதென்கிற ஸாஹஸ வ்யாபாரத்தில் திறமையை வஹிக்கிறாய்".

(தா—ம்) இந்த எட்டாவது தசகத்தில் தயையின் ஸ்வரூபத்தையும் தன்மையையும் உபகார பரம்பரைகளையும் கூறுகிறார். தயை யென்பது ஸ்ரீநிவாஸனுடைய இச்சையென்கிற ஒரு

ஞானமாகும். அந்த இச்சையாவது பிறர் துக்கத்தைத் தீர்க்க வேண்டுமென்கிற ஆசை. இதுதான் தயையின் ஸ்வரூபம். ஸகல சேதநா சேதனங்களுடைய ஸ்வரூபம் ஸ்திதி ப்ருவ்ருத்தி இம் மூன்றும் பகவானுடைய இச்சாரூபமான தயையினால் நியமனம் செய்யப்படுகின்றன. ஸ்ரீனிவாஸனுடைய தயையெனும் இச்சையைப்பிறரொருவரும் தடுக்கவொண்ணாது. அகிஞ்சனர்களுடைய ஸகல பாரங்களையும் தயை சுமந்து நிர்வஹிக்கிறாள். அநந்யர்களாய் என்னை ஸர்வவிதத்தாலும் உபாஸனம்செய்பவர்களுடைய யோக க்ஷேமங்களை நான் சுமக்கிறேனென்று கீதையில் கண்ணன் வார்த்தை. தயை நம்முடைய பாரங்களைச் சுமப்பதற்கு கார்ப்பண்யம் இருந்தால் போதும்; ஸ்ரீனிவாஸனுடைய ஞான சக்தி பல ஐச்வர்யாதி குணங்கள் தயையென்னும் குணத்திற்கு ஊழியக் காரராகி ஆச்ரிதரை ரக்ஷிக்கும்விஷயத்தில் தயையின் கட்டளைகளை நிறைவேற்றுகின்றன. இதெல்லாம் பெரிதல்ல. கொடியனிலும் கொடியனான என்னை நோக்கி என்மீது உன் கடாக்ஷங்களைச்செலுத்துவதென்கிற ஸாஹஸமான வ்யாபாரத்தை நீசெய்கிறாயே என்று ஆச்சர்யப்படுகிறார். (71)

𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑍇𑌰𑍍𑌹𑍃𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌵𑌤𑌾𑌰𑌸𑌹𑌾𑌯𑌿𑌨𑍀
𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌨𑌿𑌖𑌿𑌲𑌾𑌵𑌦𑍍𑌯𑌾 𑌦𑍇𑌵𑌿 𑌕𑍍𑌷𑌮𑌾𑌦𑌿𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌾 ।
𑌭𑍁𑌵𑌨𑌜𑌨𑌨𑍀 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌭𑍋𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌵𑌿𑌧𑌾𑌯𑌿𑌨𑍀
𑌵𑌿𑌤𑌮𑌸𑌿 𑌪𑌦𑍇 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌬𑌿𑌭𑌰𑍍𑌷𑌿 𑌦𑌯𑍇 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

வ்ருஷகிரிபதேர் ஹ்ருத்யா விச்வாவதாரஸஹாயிநீ
க்ஷபிதநிகிலாவத்யா தேவி க்ஷமாதிநிஷேவிதா ।
புவநஜநநீ பும்ஸாம் போகாபவர்கவிதாயிநீ
விதமஸி பதே வ்யக்திம் நித்யாம் பிபர்ஷி தயே ஸ்வயம் ॥

(ப-ரை) 𑌦𑌯𑍇 - தயையே - 𑌦𑍇𑌵𑌿 - தேவியே, 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑍇𑌰𑍍𑌹𑍃𑌦𑍍𑌯𑌾 - வேங்கடமலையரசன் மார்பில் வஸிப்பவளாயும், (ஹ்ருதயத்திலுள்ளவளாயும்) 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌵𑌤𑌾𑌰𑌸𑌹𑌾𑌯𑌿𑌨𑍀 - எல்லா அவதாரங்களிலும் துணையாயிருப்பவளாயும், (ஸஹாயம் செய்பவளாயும்), 𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌨𑌿𑌖𑌿𑌲𑌾𑌵𑌦𑍍𑌯𑌾 - ஸமஸ்தபாபங்களையும் போக்குபவளாயும், 𑌕𑍍𑌷𑌮𑌾𑌦𑌿𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌾 - பூமிப் பிராட்டி முதலியவர்களால் ஸேவிக்கப்பட்டவளாயும், (பொறுமை முதலிய குணங்களோடு கூடியவளாயும்) 𑌭𑍁𑌵𑌨𑌜𑌨𑌨𑍀 - உலகத்திற்குத் தாயாராயும், (உலகத்தை ஸ்ருஷ்டிப்பவளாயும்) 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 - ஜீவர்களுக்கு, 𑌭𑍋𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌵𑌿𑌧𑌾𑌯𑌿𑌨𑍀 - போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுப்பவளாயும், 𑌵𑌿𑌤𑌮𑌸𑌿 𑌪𑌦𑍇 - ரஜோகுணம் தமோகுணமில்லாத பரமபதத்தில், 𑌸𑍍𑌵𑌯𑌂 - நீயாகவே, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 - நித்யமான, 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌂 - ஆவிர்ப்பாவத்தை, 𑌬𑌿𑌭𑌰𑍍𑌷𑌿 - வைத்துக்கொண்டிருக்கிறாய். (இங்கே தயை லக்ஷ்மீ ஸ்வரூபம்போல அநுஸந்தானம்).

"விளையாடும் சீலத்தையுடைய தயாதேவியே! வேங்கடபதியினுடைய மனோஹரமானப்ரியையாயும்(அவன் திருமார்பில்வசிப்வளாயும்) அவனுடைய எல்லா அவதாரங்களுக்கும் காரணமாயும், (அவனவதரிக்கும் போதெல்லாம் அவனோடு ஸஹசரிப்பவளாயும்) ஸகல தோஷங்களையும் போக்குபவளாயும் க்ஷமை முதலிய குணங்களாலே ஸேவிக்கப்பட்டவளாயும்,(க்ஷமையென்னும் பூமிமுதலிய பிராட்டிகளாலே உபசரிக்கப்பட்டவளாயும்) உலகத்துக்கெல்லாம் தாயாயும், ஜனங்களுக்கு போகமோக்ஷங்களைக் கொடுப்பவளாயும் தமோகுணலேசமில்லாத பரமபதத்தில் நித்யமான விக்ரஹத்தை உன்னுடைய ஸ்வேச்சையினால் தரிப்பவளாயும் இருக்கிறாய்".

(தா-ம்) இந்த சுலோகத்தில் தயாதேவிக்கும் லக்ஷ்மீப்பிராட்டிக்கும் பொருந்தும்படியான விசேஷணங்களை அமைத்துத் தயையை வர்ணிப்பதால் லக்ஷ்மீப் பிராட்டிதான் தயையின் ஸ்வரூபம் என்பதைக் காட்டுகிறார். தயை என்னும் குணத்தை ஸ்தோத்ரம் செய்வதும், ஒவ்வொரு சுலோகத்திலும் தயையை ஸம்போதனம் செய்து ஸம்பாஷணம் செய்வதும் தகுமோ? சேதனர்களை அல்லவோ கூப்பிட்டுப் பேசுவது உசிதமாகும். தயையை இப்படி ஸ்தோத்ரம் செய்வது விவேகக்ருத்யமாகாது என்று இப்படி ஆக்ஷேபங்கள் வரக்கூடியதை தயை என்பது லக்ஷ்மீப்பிராட்டியே யொழிய வேறன்று என்றும், லக்ஷ்மீப்பிராட்டி தயையின் மூர்த்தி என்றும் கூறுவதினால் பரிஹரிக்கிறார். தயா ஸ்தோத்ரமென்பது தயையே வடிவெடுத்ததுபோன்ற லக்ஷ்மீதேவியின் ஸ்தோத்ரமானதால் தயையை இப்படி ஸ்தோத்ரம் செய்து அவளைக் கூப்பிட்டுப் பேசுவது அநுசிதமன்று. பகவானுடைய எல்லா அவதாரங்களிலும் பிராட்டியும் அந்தந்த அவ

தாரத்திற்குத் தக்கபடி வடிவுகளைப் பரிக்ரஹித்துக் கூட அவதரிக்கிறாள். எல்லா அவதாரங்களிலும் விஷ்ணுவோடு ஸ்ரீயானவள் நழுவாமல் அநபாயிநியாயிருக்கிறாள் என்கிற ஸ்ரீவிஷ்ணுபுராண வசனத்தை இங்கே நினைக்கிறார். பரமபதத்தில் இவளுடைய ஆத்யவிக்ரஹம் நித்யமானது. (72)

ஸ்வயமுதயிந: ஸித்தாத்யாவிஷ்க்ருதாஶ்ச ஶுபாலயா
விவிதவிபவவ்யூஹாவாஸா: பரம் ச பதம் விபோ: ।
வ்ருஷகிரிமுகேஷ்வேதேஷ்விச்சாவதிப்ரதிலப்தயே
த்ருடவிநிஹிதா நிஶ்ரேணிஸ்த்வம் தயே நிஜபர்வபி: ॥௭௩॥

ஸ்வயமுதயிந: ஸித்தாத்யாவிஷ்க்ருதாம்ச சுபாலயா
விவிதவிபவவ்யூஹாவாஸா: பரம் ச பதம் விபோ: ।
வ்ருஷகிரிமுகேஷ்வேதேஷ்விச்சாவதிப்ரதிலப்தயே
த்ருடவிநிஹிதா நிச்ரேணிஸ்த்வம் தயே நிஜபர்வபி: ॥

(ப-ரை) தயே - தயையே! ஸ்வயமுதயிந:-ஸ்வயம்வ்யக்தரும், ஸித்தாத்யாவிஷ்க்ருதாஶ்ச - ஸித்தரான தமர்க்கு ஸேவை ஸாதித்து ப்ரகாசமானவைகளுமான, ஶுபாலயா: - திவ்ய தேசார்ச்சைகளும், விவிதவிபவவ்யூஹாவாஸா: - பலவிதமான அவதாரவிக்ரஹங்கள், வ்யூஹவிக்ரஹங்கள், ஹ்ருதயத்தில் வஸிக்கும் அந்தர்யாமிவிக்ரஹங்களும், பரம் ச பதம் விபோ: - ப்ரபுவின் பரமப்ராப்யமான விக்ரஹமும், வ்ருஷகிரிமுகேஷு ஏதேஷு - வேங்கடமலை முதலிய இந்த திவ்யங்களில், இச்சாவதிப்ரதிலப்தயே- மனோரதகாஷ்டையை அடைவதற்கு, த்வம் - நீ, நிஜபர்வபி: - உன் ஸொந்த கணுக்களால், த்ருடவிநிஹிதா - கெட்டியாயமைக்கப்பட்ட, நிஶ்ரேணி: - ஏணி, (ஆகிறாய்).

"தயையே! ஸ்வயம் வ்யக்தரான விக்ரஹங்களுடன் கூடியதும், ஸித்தர் முதலியவர்களால் ப்ரகாசிக்கப்பட்டதாயும் உள்ள திவ்யக்ஷேத்ரங்களிலும், அநேகவிதமான விபவாவதாரங்களுடையவும், வ்யூஹாவதாரங்களுடையவும் வாஸஸ்தானங்களிலும், உலகத்துக்கெல்லாம் ப்ரபுவாகிய பரவாஸுதேவனுடைய பரமபதத்திலும், திருமலை முதலிய இடங்களிலும் அபிமதமான புருஷார்த்தங்களை எல்லாம் அடைவதற்காக உன்னுடைய பர்வங்களாலே கெட்டியாய்க் கட்டப்பட்ட ஏணியாகிறாய்".



(தா-ம்) ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்களிலும் ஸித்தர்கள் உவப்பை ஆதரித்துப் பகவான் அர்ச்சாரூபியாய் ஸேவை ஸாதிக்கும் க்ஷேத்ரங்களிலும், பகவான் ஸௌலப்யகாஷ்டையை அவலம்பித்து நம்மை யநுக்ரஹித்தருளுவது தயையின் ப்ரபாவம். இப்படியே விபவாவதாரங்களும் வ்யூஹாவதாரங்களும் தயையின் பெருமை. பரமபதத்தில்பகவான் ஸேவைஸாதிப்பதும் தயையின்பெருமை. வேங்கடமலையில் ஸ்ரீநிவாஸன் ஸேவை ஸாதிப்பதும் தயையின் மஹிமை. பரமபதத்திற்குப் பிறகு வேங்கடமலையைக் கூறுவதால் திருமலை பரமபதத்திற்கும் மேற்பட்டதென்கிற அபிப்பிராயத்தை ஸூசனம் செய்கிறார். ஆச்ரிதர்கள் அவரவர்கள் ஆசைப்படும் புருஷார்த்தங்களை எல்லாம் அடைவிப்பதற்குத் தயையே தயாமயமான கெட்டியான படிகளால் அமைக்கப்பட்ட த்ருடமான ஏணியாகிறாள். (73)

ஹிதமிதி ஜகத்த்ருஷ்ட்யா க்லுப்தைரக்லுப்தபலாந்தரை
ரமதிவிஹிதைரந்யைர்தர்மாயிதைஶ்ச யத்ருச்சயா ।
பரிணதபஹுச்சத்மா பத்மாஸஹாய தயே ஸ்வயம்
ப்ரதிஶஸி நிஜாபிப்ரேதம் ந: ப்ரஶாம்யதபத்ரபா ॥

ஹிதமிதி ஜகத்த்ருஷ்ட்யா க்லுப்தைரக்லுப்தபலாந்தரை
ரமதிவிஹிதைரந்யைர்தர்மாயிதைம்ச யத்ருச்சயா ।
பரிணதபஹுச்சத்மா பத்மாஸஹாய தயே ஸ்வயம்
ப்ரதிசஸி நிஜாபிப்ரேதம் ந: ப்ரசாம்யதபத்ரபா ॥ (74)

(ப-ரை) பத்மாஸஹாய தயே - லக்ஷ்மீஸஹாயனான ஸ்ரீநிவாஸன் தயையே! ஹிதமிதி - ஹிதமென்று, ஜகத்த்ருஷ்ட்யா - உலகத்ருஷ்டிக்கு, க்லுப்தை:- கல்பித்துக்கொள்ளப்பட்ட ப்ராஸங்கிகஸுக்ருதங்களைக்கொண்டும், அக்லுப்தபலாந்தரை: - ஆநுஷங்கிகஸுக்ருதங்களைக் கொண்டும், அமதிவிஹிதை: - புத்திபூர்வமல்லாத அஜ்ஞாதஸுக்ருதங்களைக் கொண்டும், யத்ருச்சயா தர்மாயிதை:- யாத்ருச்சிகஸுக்ருதங்களைக் கொண்டும், அந்யை: - ஸாமாந்யபுத்திமூலமான மற்ற ஸுக்ருதங்களைக்

கொண்டும், வஹித பவ்யாஜா - அநேக சாக்குகளை வைத்துக்கொண்டு, ஸ்வயம் - நீயாகவே, நிஜாபிப்ரேதம் - உன்னுலேயே எண்ணப்பட்டதை, ந: - எங்களுக்கு, திஶஸி - கொடுக்கிறாய்.

'பத்மாஸஹாய தயையே! உலகத்தார் நினைப்பதுபோல் ப்ரயோஜநத்தைக் கொடுக்குமென்று உத்தேசித்துச் செய்யப்பட்டதும், அந்தந்த புண்யகர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரயோஜனத்தைத் தவிர ப்ரயோஜனத்தைத் துறப்பதனுலேயே மோக்ஷமார்க்கத்திற்கு உபயோகப்படக்கூடிய நிவ்ருத்தி கர்மம் என்னும் ஆகாரத்தை எண்ணுமல் செய்யப்பட்டதும், புத்தி பூர்வகமல்லாமல் ஒரு புண்யம் செய்யவேண்டுமென்கிற உத்தேசமில்லாமல் செய்யப்பட்டதும், செய்கிறவன் எண்ணுமலே யத்ருச்சையாய் தர்மமாக பர்யவஸிப்பதுமான தர்மங்களை வ்யாஜங்களாக நீ கல்பித்துக்கொண்டு ரக்ஷணத்திற்கு யோக்யமே யல்லாத என் போன்றவர்களை ரக்ஷிப்பதில் உண்டாகக்கூடிய வெட்கத்தைத் தவிர்த்து நீயாகவே உன்மனதில் எங்களுக்கு ஹிதமென்று படும் புருஷார்த்தத்தைக் கொடுக்கிறாய்".

(தா—ம்) மோக்ஷோபாயங்களில் இறங்குவதற்கு நாம் புத்தி பூர்வகமாயும் ப்ரயோஜனங்களை உத்தேசியாமலும் ஸுக்ருதங்களைச் செய்யாமலிருந்தாலும் அக்ஞாதமாகவும், ப்ராஸங்கிகமாகவும் செய்யும் ஸுக்ருதங்களை வ்யாஜங்களாகக்கல்பித்துக்கொண்டு தயாதேவி நமக்கு மோக்ஷமார்க்கத்தில் ருசியை உண்டாக்கி மோக்ஷோபாயங்களில் நம்மை மூட்டுகிருள். கொஞ்சமேனும் நம்மிடம் யாதொரு மோக்ஷயோக்யதையும் இல்லாமல் நம்மைக் காப்பாற்ற முயற்சி செய்வது வெட்கத்தைக் கொடுக்கக்கூடியது. அந்த வெட்கத்திற்குப்பரிகாரமாக நாம் அறியாமற் செய்த ஸுக்ருதங்களையும் ஒரு பொருட்டாக எண்ணி அதை நம்மைக் காப்பாற்றுவதற்கு வியாஜமாக ஏற்படுத்திக்கொள்ளுகிருள். (74)

அதிவிதி ஶிவைஶ்வர்யாத்மாநுபூதிரஸைர்ஜநாந்
அஹ்ருதயமிஹோபச்சந்த்யைஷாமஸங்கதஸார்த்திநீ ।
த்ருஷிதஜநதாதீர்த்தஸ்நாநக்ரமக்ஷபிதைநஸாம்
விதரஸி தயே வீதாதங்கா வ்ருஷாத்ரிபதே: பதம் ॥ எரு ॥



அதிவிதி சிவைரைச்வர்யாத்மாநுபூதிரஸைர்ஜநாந்
அஹ்ருதயமிஹோபச்சந்த்யைஷாமஸங்கதசார்த்திநீ I
த்ருஷிதஜநதாதீர்த்தஸ்நாநக்ரமக்ஷபிதைநஸாம்
விதரஸி தயே வீதாதங்கா வ்ருஷாத்ரிபதே: பதம் II (75)

(ப-ரை) தயே - தயையே! அதிவிதிஶிவை:-(விதி) ப்ரஹ்மா சிவர் இவர்களுக்கு மேற்பட்ட, ஐஶ்வர்யாத்மாநுபூதிரஸை: - ஐச்வர்யம் கைவல்ய ரஸாநுபவங்களால், ஏஷாம் - இவர்களுடைய, அஸங்கதஸார்த்திநீ - பற்றில்லாத அவஸ்தை வரவேண்டுமென்று கோறி, ஜநாந் - ஜநங்களை, அஹ்ருதயம் - தெரியாமல், இஹ - இங்கே (பெருமாளிடம்), உபச்சந்த்ய - ஆசைகாட்டி இழுத்துவந்து, த்ருஷிதஜநதாதீர்த்தஸ்நாநக்ரமக்ஷபிதைநஸாம் - விடாய்ப்பட்டவர் (புண்ய தீர்த்தத்தில்) விடாய்தீர ஸ்நாநம்செய்வதால் (அறியாமலேயே) பாபம் கழிவதுபோல் அவர்கள் பாபம் நீங்கச்செய்து, வீதாதங்கா - நீ வெட்கப்படாமல் (கொடுப்பதற்கு) இடத்தைச் செய்துகொண்டு ஸங்கோசமில்லாமல், வ்ருஷாத்ரிபதே: - திருமலையரசனுடைய, பதம் - திருவடியை, ஸ்தானத்தை, விதரஸி - அளிக்கிறாய்.

"தயையே! ப்ரும்ம ருத்ராதிகளுக்கும் மேல்பட்டதான ஐச்வர்ய கைவல்ய அனுபவங்களை ப்ராணிகளுடைய ஸந்தோஷத்திற்காகக் கொடுப்பதுபோல் காட்டி அவர்களை ஆவர்ஜனம் செய்து பாபத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக புண்யநதியில் ஸ்நாநம் செய்வதால் பாபம் கழிவதுபோல் அவர்கள் எண்ணுமலிருந்தும் அவர்களுக்கு ஐச்வர்ய கைவல்யாதி போகங்களிலும் வைராக்யத்தை மூட்டிவிட்டு, நிர்பயமாய் ஸ்ரீநிவாஸனுடைய திருவடியென்னும் உத்தமபதத்தை அளிக்கிறாய்."

(தா—ம்) ஸ்ரீநிவாஸனுடைய திருவடிலாபம் ஸர்வோத்தமமான புருஷார்த்தம், ப்ரயோஜநாந்தரங்களைத் துச்சமென்று அடியோடு தள்ளி ஸம்பூர்ணமான வைராக்யம் நிஷ்பந்நமானலொழிய அவன் திருவடியை அடைய அதிகாரமில்லை. யோக்யதை இல்லாதவர்களுக்கு அவன் திருவடியை அடைவிக்கக் கூசுவது ஸகஜம். இந்த சங்கையை தீர்த்துக்கொள்வதற்காகமெள்ள

மெள்ளநம்மைத்தயாதேவி வைராக்ய மார்க்கத்தில் திருப்புகிருள். கங்கை முதலிய புண்யநதிகளில் நம்முடைய தாபம் தீர்வதற்கென்று மட்டும் நாம் அவகாஹனம் செய்தாலும் புண்யதீர்த்தத்திற்குள்ள மஹிமையின் பலத்தால் நாம் எண்ணுமலே நம்முடைய பாபம் கழிகிறது. அப்படியே நமக்கு உயர்ந்த பலன்களைக் கொடுத்து நம்மை ஆவர்ஜனம் செய்து மெள்ள மெள்ள அந்தப் பலங்களிலும் பற்று அறும்படி தயாதேவி செய்விக்கிருள். (75)

𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍌 𑌜𑌨𑍍𑌤𑍁𑌰𑍍𑌦𑌯𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾
𑌭𑌵𑌭𑌯𑌪𑌰𑍀𑌤𑌾𑌪𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌭𑌜𑌨𑍍𑌨𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌮𑍁𑌷𑌿𑌤𑌕𑌲𑍁𑌷𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑍈𑌰𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑍈𑌰𑌭𑌿𑌪𑍂𑌰𑍍𑌯𑌤𑍇
𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌪𑌨𑌤𑍈𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 ॥

வ்ருஷகிரிஸுதாஸிந்தௌ ஜந்துர்தயே நிஹிதஸ்த்வயா
பவபயபரீதாபச்சித்யை பஜந்நகமர்ஷணம் ।
முஷிதகலுஷோ முக்தைரக்ரேஸரைரபிபூர்யதே
ஸ்வயமுபநதை: ஸ்வாத்மாநந்தப்ரப்ருத்யநுபந்திபி: ॥ (76)

(ப-ரை) 𑌦𑌯𑍇 - தயையே! 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍌 - வேங்கடமலையிலுள்ள அம்ருதஸமுத்ரத்தில், 𑌤𑍍𑌵𑌯𑌾 - உன்னலே, 𑌨𑌿𑌹𑌿𑌤𑌃 - சேர்க்கப்பட்ட, 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 - ப்ராணியானவன், 𑌭𑌵𑌭𑌯𑌪𑌰𑍀𑌤𑌾𑌪𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 - ஸம்ஸாரபயம், தாபம் இவை நீங்கும்படி, 𑌅𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌂 - பாபம் தொலையும் ஸாதநத்தை அடைந்து, 𑌮𑍁𑌷𑌿𑌤𑌕𑌲𑍁𑌷𑌃 - பாபம் நீங்கினவனுய், 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌪𑌨𑌤𑍈𑌃 - தானே வரும், 𑌮𑍁𑌕𑍍𑌤𑍈𑌃 - மோக்ஷத்திற்கு, 𑌅𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑍈𑌃 - முன்புள்ளதான, 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 - ஸ்வஸ்வரூபாநந்தம் முதலிய (போகங்களால்), 𑌅𑌭𑌿𑌪𑍂𑌰𑍍𑌯𑌤𑍇 - பூரிக்கப்படுகிருன்.

"தயையே! ஸம்ஸாரபயமென்னும் தாபத்ரயங்களைத் தீர்ப்பதற்காகத் திருமலையிலிருக்கும் ஸ்ரீனிவாஸனென்னும் அம்ருதஸமுத்ரத்தில் சேர்க்கப்பட்டு ஸர்வ பாபங்களையும் போக்கக் கூடிய சரணுகதியென்னும் அகமர்ஷண ஸ்நானத்தை அடையப் பெற்றுக் கலுஷங்களெல்லாம் நீங்கி மோக்ஷத்திற்கு முன்னடியாக வலியவரும் ஆத்மாநுபவம் முதலிய பரிகரங்களாலே பூரிக்கப்படுகிருன்".



(தா-ம்) தயாதேவி நம்மை முக்தி யோக்யர்களாகச் செய்விக்கத் தானே வலிய நமக்குச் செய்யும் உபகார பரம்பரைகளை வர்ணித்துக்கொண்டு வருகிருர். சரணுகதியென்பது நம்முடைய அநந்தகோடி பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாகும். மோக்ஷத்தையும் அளிக்கும். திருமலையிலெழுந்தருளி இருக்கும் ஸ்ரீனிவாஸன் ஓர் அம்ருதஸ்முத்ரமாவார். வெயிற்காலத்தில் ப்ரசண்ட ஸூர்ய தாபத்தினல் அதாந்த தப்தரானவர் குளிர்ந்தமடுவிலே இறங்கி ஆழ்ந்து தாபம் தீர்ந்து குளிர்ச்சி அடைவதுபோல் ப்ரஹ்மமென்னும் குளிர்ந்த ஜலாசயத்தில் ப்ரவேசித்து ஆழ்ந்து மகிழ்கிறேன் என்கிற ப்ரமாணவசனத்தை அனுஸரித்து இங்கேவர்ணிக்கிருர். ப்ரஹ்மத்தில் ஒடுங்குவதென்னும் சரணுகதி உபாயத்திலும் முன் ச்லோகங்களில் வர்ணித்த க்ரமமாக தயை தாணுகவே சிற்சில வ்யாஜங்களைக் கல்பித்துக்கொண்டு மோக்ஷமார்க்கத்தில் நம்மைத் திருப்பி மோக்ஷத்திற்கு உபாயமான சரணுகதியில் நாம் இழியும்படி செய்விக்கிருள். மோக்ஷத்தில் ருசியுண்டாகி அந்த வழியில் இறங்கிமோக்ஷோபாயமான சரணுகதியின் அனுஷ்டானத்திற்குப் பிறகு இந்த லீலா விபூதியில் உள்ள காலத்தில் தன்னுடைய ஸ்வரூபத்தின்ஸ்வாபாவிகமான ஆனந்தம் பகவதநுபவ பரிவாஹமான பகவத் கைங்கர்யங்களின் ஆனந்தம் முதலிய ஸுகங்கள் மோக்ஷானந்தம் வருவதற்கு முன்பு இவனுடைய அநுபவத்திற்குக் கிடைக்கின்றன. (76)

𑌅𑌨𑌿𑌤𑌰𑌜𑍁𑌷𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑍂𑌲𑍇𑌽𑌪𑍍𑌯𑌪𑌾𑌯𑌪𑌰𑌿𑌪𑍍𑌲𑌵𑍇
𑌕𑍃𑌤𑌵𑌿𑌤𑌨𑌕𑌾 𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑍈𑌷𑌾𑌂 𑌕𑍃𑌪𑍇 𑌯𑌮𑌵𑌶𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌪𑌦𑌨𑌫𑌲𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌶𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌪𑌾𑌦𑌤𑍍𑌸𑍇 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌹𑌿𑌤𑍈𑌷𑌿𑌣𑌾 ॥

அநிதரஜுஷாமந்தர்மூலேZப்யபாயபரிப்லவே
க்ருதவிதநகா விச்சித்யைஷாம் க்ருபே யமவச்யதாம் ।
ப்ரபதநபலப்ரத்யாதேச ப்ரஸங்கவிவர்ஜிதம்
ப்ரதிவிதிமுபாதத்ஸே ஸார்த்தம் வ்ருஷாத்ரிஹிதைஷிணா ॥

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே! 𑌅𑌨𑌿𑌤𑌰𑌜𑍁𑌷𑌾𑌂 - இதர ப்ரயோஜனத்தையும் இதர ஸத்வத்தையும் பற்ருத ப்ரபந்நருக்கு, 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 - புத்திமூலமான (தெரிந்து செய்யும்)

𑌅𑌪𑌾𑌯𑌪𑌰𑌿𑌪𑍍𑌲𑌵𑍇 𑌅𑌪𑌿 - குற்றமென்னும் கெடுதி நேரிடும் பொழுதும், 𑌕𑍃𑌤𑌵𑌿𑌦𑌃 - செய்த ப்ரபத்தியை ஓர் பேருதவி யென்று நினைத்து க்ருதஜ்ஞையாய், 𑌅𑌨𑌘𑌾 - குற்றத்திற்கு சிக்ஷிப்பதென்பதைக் கைப்பற்றாமல், 𑌤𑍇𑌷𑌾𑌂-அவர்களுக்கு, 𑌯𑌮𑌵𑌶𑍍𑌯𑌤𑌾𑌂 𑌵𑌿𑌹𑌤𑍍𑌯 - (நிர்யாணகாலத்தில்) யமனுக்கு வச்யமாகுமாபத்தைத் தொலைத்து, 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿 𑌹𑌿𑌤𑍈𑌷𑌿𑌣𑌾 - வேங்கடமலையிலுள்ள ஹிதைஷியான (ஹிதத்தை விரும்பும்) பெருமாளோடு, 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 - கூட(ச்சேர்ந்து), 𑌪𑍍𑌰𑌪𑌦𑌨𑌫𑌲𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 - ப்ரபத்திக்கு பலமாக ஸங்கல்பிக்கப்பட்ட மோக்ஷத்திற்குத் தடைக்கு இடமே இல்லாதபடி, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌿𑌧𑌿𑌂 - ப்ராயச்சித்தத்தை (மறுபடியும் சரணமடைவது முதலியதை), 𑌉𑌪𑌾𑌧𑌤𑍍𑌸𑍇 - ஏற்படுத்துகிறாய்.

"இதரதெய்வங்களையும் ப்ரயோஜனாந்தரங்களையும் பற்றாமல் உன்னையே சரணம் பற்றியவருக்கு ப்ராரப்த கர்மவசத்தால் புத்திபூர்வகமான பாபங்கள் நேர்ந்தாலும், இவர்கள் பண்ணின சரணாகதியை நீ மறவாமல் கோபலேசமில்லாமல் அவர்கள் அபராதத்திற்காக வரக்கூடிய யமவச்யதையைத் தடுத்து, அவர்கள் சரணாகதிக்குப்பலமான மோக்ஷத்திற்கு யாதொருவிக்நமும்வாராமல் இருக்கும்படி திருமலையில் எழுந்தருளியிருக்கும் ஹிதைஷியான ஸ்ரீநிவாஸனுடன் கலந்துகொண்டு அந்தப் பாபங்கள் கழிவதற்கு வேண்டிய மறுபடியும் ப்ரபதநம் செய்தல் முதலிய ப்ராயச்சித்தத்தைச் செய்விக்கிறாய்".

(தா-ம்) பகவானுக்கு ப்ராதிகூல்யத்தை ஒருகாலும் ஆசரிப்பதில்லை என்று உறுதியாக ஸங்கல்பித்துக்கொண்டு சரணாகதி அனுஷ்டானம் செய்தவர்கள், பிறகு பகவதாஜ்ஞைக்கு விரோதமாகத் தெரிந்து பாபம் செய்ய ஞாயமே இல்லை. தெரியாமற் செய்யும் பாபங்கள் ஒட்டமாட்டா. தெரிந்து ஒருகால் பாபங்கள்செய்ய நேரிட்டால் அந்த பாபத்திற்குப் பலமாக யமதர்மராஜருடைய நாட்டில் சிறைப்படுவதற்கு ஹேதுவாகக் கூடுமாதலால், அந்தப்பாபங்களை ப்ராயச்சித்தம்முதலியதால் தொலைத்து விடுவதற்கு வேண்டிய உபாயத்தை ஸ்ரீனிவாஸனும் தயாதேவியும் கலந்து ஏற்பாடு செய்கிறார்கள். புத்தி பூர்வமாகச் செய்த



பாபங்களுக்கு மறுபடியும் ப்ரபதநம் செய்வது ப்ராயச்சித்தமாகும். லகுவான தண்டனையினாலும் அந்தப் பாபங்கள் கழியும். சரணாகதனுடைய ரக்ஷணத்தின் பாரத்தை ஸ்ரீனிவாஸனும் தயாதேவியும் ஏற்றுக்கொண்டு விட்டபடியால் ப்ரபந்நர் கோரினபடி இந்த தேஹத்தின் முடிவிலேயே மோக்ஷத்தை அளிப்பது அவர்கள் பொறுப்பாய் விடுகிறது. அதனால் அதற்கு விக்நமாகக்கூடிய பாபங்களெல்லாம் கழியும்படியான வழியை அவர்களே தேடுகிறார்கள். (77)

𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌲𑌯𑌿𑌨𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌫𑌲𑌾𑌯 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑍇
𑌸𑍁𑌰𑌪𑌿𑌤𑍃𑌗𑌣𑍇 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌗𑌪𑌿 𑌪𑍍𑌰𑌳𑌯𑌂 𑌗𑌤𑍇 ।
𑌅𑌧𑌿𑌗𑌤𑌵𑍃𑌷𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌨𑍍𑌨𑌾𑌥𑌾𑌮𑌕𑌾𑌲𑌵𑌶𑌂𑌵𑌦𑌾𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍁𑌵𑌮𑌿𑌹 𑌵𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌥𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑍃𑌪𑍇 𑌨𑌿𑌰𑍁𑌪𑌪𑍍𑌲𑌵𑌾𑌂 ॥

க்ஷணவிலயிநாம் சாஸ்த்ரார்த்தாநாம் பலாய நிவேசிதே
ஸுரபித்ருகணே நிர்வேசாத் ப்ராகபி ப்ரளயம் கதே ।
அதிகதவ்ருஷக்ஷ்மாப்ருந்நாதாமகாலவசம்வதாம்
ப்ரதிபுவமிஹ வ்யாதக்யுஸ்த்வாம் க்ருபே நிருபப்லவாம் ॥

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே! 𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌲𑌯𑌿𑌨𑌾𑌂 - ஸ்வல்ப க்ஷணத்திற்குள் நின்றுபோகிற, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 - புண்யகர்மங்களுடைய, 𑌫𑌲𑌾𑌯 - பலன்களை(க்கொடுப்பதற்காக), 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑍇 - ஏற்படுத்தப்பட்டிருக்கிற, 𑌸𑍁𑌰𑌪𑌿𑌤𑍃𑌗𑌣𑍇 - தேவதைகள் பித்ருக்களின் கணங்கள், 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌗𑌪𑌿 - புண்யகர்மங்களின் அநுபவத்திற்கு முன்பே, 𑌪𑍍𑌰𑌳𑌯𑌂 𑌗𑌤𑍇 - ப்ரளயத்தில் அழிந்துபோன பிறகும், 𑌅𑌕𑌾𑌲𑌵𑌶𑌂𑌵𑌦𑌾𑌂 - காலத்திற்கு உட்படாதவளும்(காலத்தால்அழிவடையாதவளும்), 𑌨𑌿𑌰𑍁𑌪𑌪𑍍𑌲𑌵𑌾𑌂 - யாதொருஉபத்ரவமடையாதவளும், 𑌅𑌧𑌿𑌗𑌤𑌵𑍃𑌷𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌨𑍍𑌨𑌾𑌥𑌾𑌂 – வேங்கடமலை அரசனை ஆச்ரயித்துக் கொண்டிருக்கும், 𑌤𑍍𑌵𑌾𑌂 - உன்னை, 𑌇𑌹 - இந்த விஷயத்தில் (தேவபித்ருகணத்திற்குப் பதிலாக முன் செய்த புண்யங்களுக் குப்பலன் கொடுக்கும் விஷயத்தில்), 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍁𑌵𑌂 - பதிலதிகாரியாக, 𑌵𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌥𑍁𑌃 - (பூர்வர்கள்) பணித்தார்கள்.

“க்ருபையே! க்ஷணகாலத்தில் நாசமடையக்கூடிய யாகம் முதலான ஸுக்ருத கர்மங்களின் பலத்தைக் கொடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பித்ருக்கள் தேவர்கள் முதலியவர்களின் கூட்டம் அந்தக் கர்மங்களினுடைய பலத்தின் அனுபவத்திற்கு முன்னமே ப்ரளயமடைந்தபோதிலும், காலத்திற்கு வசப்படாதவளாயும் ஸ்ரீநிவாஸனை ஆச்ரயித்தவளாயும் ஒருகாலும் அழிவில்லாதவளாயும் மாறுதலில்லாதவளாயும் உள்ள உன்னை அவர்களுடைய ஸ்தானத்தில் பதிலாய் இருப்பவளாக சாஸ்திரமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.”

(தா-ம்) யாகம்,தானம்,ஹோமம், அர்ச்சனை முதலிய புண்ய கர்மங்களுக்கு ஸ்வர்க்காதி பலன்கள் உண்டு. அந்தப் பலங்கள் சிலகாலம் கழித்து கிடைக்கக்கூடியன. பலம் கிடைக்கிற வரையில் நாம் செய்யும் புண்ய கர்மங்கள் நிற்கமாட்டா. அந்தக் கர்மங்களை அனுஷ்டித்த உடனேயே அவைகள் ஒழிந்து போம். அவைகள் க்ஷணகாலத்தில் ஓடிப்போவதால் யார் ஸ்திரமாக இருந்து அந்தந்த புண்ய கர்மங்களின் பலங்களைக் கொடுப்பவர். பகவானால் ஏற்படுத்தப்பட்ட தேவ பித்ருகணங்கள் அந்தப் புண்யங்களினால் ப்ரஸன்னராகி அந்தந்த பலங்களைக் கொடுப்பர். புண்யபலம் கைகூடுவதற்கு முன் இந்த தேவபித்ருகணங்களும் ப்ரளயமடைந்து இல்லாமற்போனால் அவர்கள் ஸ்தானத்தில் தயாதேவி இருந்துகொண்டு அந்தந்தப்பலங்களைச்சேர்ப்பிப்பாள்.

𑌤𑍍𑌵𑌦𑍁𑌪𑌸𑌦𑌨𑌾𑌦𑌦𑍍𑌯 𑌶𑍍𑌵𑍋 𑌵𑌾 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌳𑌯𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾
𑌵𑌿𑌤𑌰𑌤𑌿 𑌨𑌿𑌜𑌂 𑌪𑌾𑌦𑌾𑌂𑌭𑍋𑌜𑌂 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑌶𑍇𑌖𑌰𑌃 ।
𑌤𑌦𑌿𑌹 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌤𑌰𑌙𑍍𑌗𑌪𑌰𑌂𑌪𑌰𑌾-
𑌤𑌰𑌤𑌮𑌤𑌯𑌾 𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌤𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௭௯ ॥

**த்வதுபஸதநாதத்ய ச்வோ வா மஹாப்ரளயேऽபி வா**
**விதரதி நிஜம் பாதாம்போஜம் வ்ருஷாசலசேகர: ।**
**ததிஹ கருணே தத்தத்க்ரீடாதரங்கபரம்பரா**
**தரதமதயா ஜுஷ்டாயாஸ்தே துரத்யதாம் விது: ॥ (79)**



(ப-ரை) 𑌕𑌰𑍁𑌣𑍇 - தயையே! 𑌤𑍍𑌵𑌦𑍁𑌪𑌸𑌦𑌨𑌾𑌤𑍍 - உன்னைச் சரணமாகப் பணிந்தால், 𑌅𑌦𑍍𑌯 𑌵𑌾 - இன்றேயாவது, 𑌶𑍍𑌵𑍋 𑌵𑌾 - நாளையாவது, 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌳𑌯𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾 - மஹாப்ரளயமானாலும், 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑌶𑍇𑌖𑌰𑌃 - வேங்கடமலைக்கு சிரோபூஷணமான (பெருமாள்), 𑌨𑌿𑌜𑌂 - தன்னுடைய, 𑌪𑌾𑌦𑌾𑌂𑌭𑍋𑌜𑌂 - திருவடிக்கமலத்தை, 𑌵𑌿𑌤𑌰𑌤𑌿 - அளிக்கிறார். 𑌤𑌤𑍍 - ஆகையால், 𑌇𑌹 - இந்த விஷயத்தில், 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌤𑌰𑌙𑍍𑌗 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌤𑌰𑌤𑌮𑌤𑌯𑌾 - அந்தந்த பற்பல விளையாட்டுகளின் தாரதம்யங்களோடு, 𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌃 - கூடிய, 𑌤𑍇 - உன்னுடைய (உன்னை), 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌤𑌾𑌂 - தாண்டக்கூடாமையை, 𑌵𑌿𑌦𑍁𑌃 அறிந்தார்கள் (பெரியோர்கள்).

“கருணையே! உன்னை நாங்கள் ஆச்ரயிப்பதாலே ஸ்ரீநிவாஸன் இன்றைக்கோ நாளைக்கோ மஹா ப்ரளயத்திலோ தன் திருவடித்தாமரையை அளிக்கவே அளிப்பான். ஆகையால் பெரியோர்கள் இந்த ரக்ஷண விஷயத்தில் அலைகளுடைய வரிசைகள்போன்ற முன் பின் விளையாட்டுகளை உடைய உன்னை ஒருவரும் தடுக்க முடியாதென்று நிச்சயம் செய்கிறார்கள்.”

(தா-ம்) தயையினிடத்தில் சரணாகதி செய்தவர்களுக்கு பகவானுடைய சரணகமலங்கள் கிடைப்பதென்கிற பலம் ஒருகாலும் தவிராதென்கிற நிச்சயமான விச்வாஸத்தை வெளிப்படுத்துகிறார். இன்றோ அல்லது நூறு வருஷம் கழித்தோ ப்ராணிகளுக்கு ம்ருத்யு வருவது நிச்சயம் என்றார் வஸுதேவர் கம்ஸனிடத்தில். பிறந்தவனுக்கு ம்ருத்யு நிச்சயம் என்றார் கீதையில் கண்ணன். இங்கே ஸ்ரீநிவாஸனுடைய தயையை ஆச்ரயித்தவர்களுக்கு ம்ருத்யுவென்னும் ஸம்ஸாரம் நாசமடைவது நிச்சயமென்று வேடிக்கையாகக் காட்டுகிறார். தன்னுடைய மாயை துரத்யயையானது என்று கீதையில் கண்ணன் கூறினார். அந்த மாயையையும் தயாதேவி அடியோடு தொலைப்பதால் தயையை துரத்யயை என்று இங்கே வேடிக்கையாய் வர்ணிக்கிறார். மாயையைத் தாண்டுவது நமக்குக் கஷ்டம். பகவானை சரணமடைந்தாலல்லது மாயையைத் தாண்ட வொண்ணாது. பகவானுடைய தயையைப் பகவான்கூட உல்லங்கனம் செய்யமுடியாது. (79)

प्रणिहितधियां त्वत्संपृक्ते वृषाद्रिशिखामणौ
प्रसृमरसुधाधाराकारा प्रसीदति भावना ।
द्रढिमनि दये तद्दास्वादं विमुक्तिवलाहकं
निभृतगरुतो निध्यायन्ति स्थिराशयचातकाः ॥

ப்ரணிஹிததியாம் த்வத்ஸம்ப்ருக்தே வ்ருஷாத்ரிசிகாமணௌ
ப்ரஸ்ருமரஸுதாதாராகாரா ப்ரஸீததி பாவநா ।
த்ருடமிதி தயே தத்தாஸ்வாதம் விமுக்திவலாஹகம்
நிப்ருதகருதோ நித்யாயந்தி ஸ்திராசயசாதகா: ॥ (80)

(ப-ரை) दये - தயையே! त्वत्संपृक्ते - உன்னோடு த்ருடமாக ஸம்ஸில்ஷ்டரான, वृषाद्रिशिखामणौ - திருவேங்கடவனென்னும் சூடாமணியினிடத்தில், प्रणिहितधियां - சித்தத்தை த்யானத்தில் நிலை நிறுத்துபவர்களுக்கு, प्रसृमरसुधाधाराकारा - பெருகும் அம்ருததாரைக்கு ஒப்பாக, भावना - த்யாநமானது, प्रसीदति - தெளிவாயிருக்கும். इति - இப்படி; तदास्वादं - இன்பரஸச் சுவையைத் தரும், विमुक्तिवलाहकं - மோக்ஷத்தை வர்ஷிக்கும் மேகத்தை (பெருமாளை) निभृतगरुतः - பரந்து ஓடாமல் (இறகுகளை அசங்காமலொடுக்கிக்கொண்டு), स्थिराशयचातकाः - ஐகாந்த்யத்தை உடையசாதகப்பக்ஷிகள், द्रढिम - த்ருடமாக, निध्यायन्ति - தர்சநஸமானகாரத்யானத்தில் பார்க்கிறார்கள்.

"தயையே! உன்னோடு ஸம்ச்லிஷ்டரான ஸ்ரீனிவாஸனிடம் மனதை நிறுத்தி இடைவிடாமல் த்யானம் செய்பவர்க்கு பெருகும் அமிர்த தாரைபோன்ற த்யானதாரை தெளிவாக ப்ரவஹிக்குமென்பது திண்ணம். இப்படி த்யானம் செய்கிறவருக்கு மேலும் மேலும் த்யானச்சுவையைப் பொழியும் மோக்ஷ வர்ஷகமான பகவானென்னும் திருமலை மேகத்தை ஸ்திரமான சித்தமுடைய சாதக புக்ஷிகள் போன்ற பரமைகாந்திகள் தங்கள் பக்ஷங்களை சலிக்காமல் வைத்துக்கொண்டு த்யானம் பண்ணுகிறார்கள்"



कृष्णान्वयेन दधतीं यमुनानुभावं
तीर्थैर्यथावदवगाह्य सरस्वतीं ते ।
गोदे विकस्वरधियां भवतीकटाक्षात्
वाचः स्फुरन्ति मकरन्दमुचः कवीनाम् ॥ ॥ ४ ॥

க்ருஷ்ணாந்வயேந ததநீம் யமுநாநுபாவம்
தீர்த்தைர்யதாவதவகாஹ்ய ஸரஸ்வதீம் தே ।
கோதே விகஸ்வரதியாம் பவதீகடாக்ஷாத்
வாச: ஸ்புரந்தி மகரந்தமுச: கவீநாம் ॥ (௪)

(ப-ரை) गोदे - கோதாய்! कृष्णान्वयेन - க்ருஷ்ண ஸம்பந்தத்தால், यमुनानुभावं - யமுனையின் பெருமையை दधतीं - தரிப்பவளான, ते - உன்னுடைய, सरस्वतीं - ஸரஸ்வதியை; (வாக்கை, நதியை) तीर्थैः - குருக்களின் முகமாக, (இறங்கும் துறைகள் வழியாக), यथावत् - உள்ளபடி, (சாஸ்திரமுறைப்படி) अवगाह्य - இறங்கி ஸ்நாநம் செய்து, भवती कटाक्षात् - உன் கடாக்ஷத்தால், विकस्वरधियां - மலர்ச்சி அடைந்த புத்திகளையுடைய, कवीनां - கவிகளுடைய, वाचः - வாக்குகள், मकरन्दमुचः - தேனைப் பொழிந்துகொண்டு, स्फुरन्ति - விளங்குகின்றன.

கோதாய்; க்ருஷ்ணஸம்யோகத்தால் யமுனையின் பெருமையை உடையதான உன்னுடைய ஸரஸ்வதியை(வாக்கை,நதியை) குருக்களின் முகமாக (இறங்கும் துறைகள் வழியாக) உள்ளபடி (சாஸ்த்ரமுறைப்படி) இறங்கி ஸ்நாநம் செய்து உன் கடாக்ஷத்தால் மலர்ச்சியடைந்த புத்திகளையுடைய கவிகளுடைய வாக்குகள் தேனைப் பொழிந்துகொண்டு விளங்குகின்றன.

அவதாரிகைகள்— (1) என் நாயகனுடைய ஓர் அவதாரமான ஹயக்ரீவமூர்த்தியை நீர் துதிக்கையில் 'ஸ்ருதிப்ரணிதாந- निबिडस्वरमञ्जुलैः ... प्रतीमः' என்று பேசினீர். 'அவர் ரத்னச்சிலம்பின் இனிய ஓசையில் வேத ஸரஸ்வதிகள் பெட்டியில்போல் அடங்கியிருக்கின்றன' என்று பாடினீர். இங்கே பெண்பிள்ளையாகிய என் சிலம்பின் ஓசை

மையப்போல் இனிய வாக்கென்கிறீர். இரண்டிடத்திலும் 'மணி நூபுராம்' என்று ஒரேவிதப்பேச்சு. அங்கே 27-ம் சுலோகத்தில் "கடாக்ஷா:, ச்ரோத்ரேஷு பும்ஸாம் அம்ருதம் க்ஷரந்தீம், ஸரஸ்வதீம் ஸம்ச்ரயந்தாம்" என்று பாடினீர். 'உம்முடைய கடாக்ஷங்கள் மநுஷ்யர்கள் காதுகளில் அம்ருதத்தை வார்க்கும் ஸரஸ்வதியை எனக்கருளவேண்டும்' என்று ஹயக்ரீவதேவனைப் ப்ரார்த்தித்தீர். அம்ருதவாக்கை அவரிடமே ப்ரார்த்திக்கலாமே. அவரிடம் ப்ரார்த்தித்ததை அவர் முன்பே உமக்கு அருளியிருக்கிறார். இப்பொழுது வெறும்பேச்சாக முகஸ்துதியாக நீர் அதே வார்த்தைகளைக்கொண்டு யாசிக்கிறீர். ஹயக்ரீவனிடமிருந்து அடையாமல் என்னிடமிருந்து பெறவேண்டியது மீதியுண்டோ? இதற்குப் பதில் கூறுகிறார்:— அம்மா நீ நன்றாய்க் கவனிக்கவேண்டும். பரமபுருஷனாகிய உன்னுடைய நாயகன் காதுகளில் அம்ருதத்தை வார்ப்பதுபோல் இனிமையான வாக்கையல்லவோ நான் முன் சுலோகத்தில் ப்ரார்த்தித்தது. என் இஷ்டதைவமான ஹயக்ரீவரை 'பும்ஸாம்' என்று பொதுவாக மநுஷ்யர்கள் செவிகளுக்கு இனிய ஸரஸ்வதியைத்தானே ப்ரார்த்தித்தேன். இங்கே உன்னை யாசிப்பது பரமபுமானுடைய செவிகளுக்கு அம்ருதமான சொற்கள். உன் நாயகன் ரங்கநடரல்லவோ. சிலம்பில்லாமலும், சிலம்போசையில்லாமலும் நர்த்தனம் செய்வரோ. நான் மனப்பூர்வமாக உண்மையாகத்தான் துதிக்கிறேன். ஹயக்ரீவஸ்தோத்ரத்தில் 'கடாக்ஷா: ஸம்ச்ரயந்தாம்' என்று அநேக கடாக்ஷங்கள் சேர்ந்து வாக்கை அநுக்ரஹிக்கட்டும் என்று ப்ரார்த்தித்தேன். உன்னுடைய ஒரு கடாக்ஷத்தைப் பெற்றுத் தேன் பொழியும் பல வாக்குகள் ப்ரவஹிக்கும் என்று இந்த சுலோகத்தில் 'பவதீ கடாக்ஷாத் வாச: ஸ்புரந்தி' என்று பேசப் போகிறேன், அம்மா!

(2) என் கவிகளைக் கற்று யாரேனும் கவிகளானார்களா? அம்ருதவாக்கைப் பெற்றிருக்கிறார்களா? வாக்தேவியான ஸரஸ்வதியை உபாஸித்துக் கவிகள் அம்ருதவாணியைப் பெறுவரென்பரே. 'தேவீம் வாசமஜநயந்த தேவா:' என்பர். இதன் பதில்— உன்னுடைய வாக்குத்தான் பரிசுத்தமான ஸரஸ்வதி. ரஸம் ஓர் அவிச்சிந்நப்ரவாஹமாக புண்யநதியைப்போல் பெருக்குடையது. உன் ஸரஸ்வதியை குருக்கள் முகமாகக் கற்றுத் தேன் மொழியைப் பெற்று ப்ரகாசித்தவர் ஆளவந்தார், ஆழ்வான், பட்டர் முதலியவர். ஸரஸ்வதிதேவி கடாக்ஷம் பெற்ற கவிகளிலும் நம் பூர்வாசார்யரான கவிகள் சிறந்தவர்கள். இவர்கள் கவிகள் இனிப்போடு நிகரற்ற பரிசுத்தியையுமுடையன. உன் ப்ரபந்தங்கள் பரிசுத்தமான இனிய ஸரஸ்வதி, அவர்கள் வாக்ஸரஸ்வதியும் அப்படியே. "த்வாவ்யாஜவிஷ்ணுபத்ரியோ: ஸாரஸ்வதம் ஶாஶ்வதம்" என்று அவர்கள் வாக்கை வர்ணித்துளது. அவர்கள் மதியும் வாக்கும் ஆஜாநசுத்தம். "செஞ்சொற்கவிகாள்"

க்ருஷ்ணாந்வயேந— க்ருஷ்ணன்ஸம்பந்தத்தால் க்ருஷ்ண த்ருஷ்ணாமயம் உன்னுடையஸரஸ்வதி; க்ருஷ்ணனிடம்சுத்தமான பாவம் ஓர் ஸரஸ்வதிவெள்ளமாகப் பெருகியுளது. க்ருஷ்ணரஸநதியாகுமுன்னுடைய ஸரஸ்வதீ. க்ருஷ்ணனிடம் ஸமந்வயமுடையன உன் காவ்யங்கள். ப்ரஹ்மத்தினிடத்தில் வேதாந்தஸரஸ்வதிகளுக்கு ஸமந்வயத்தை நிரூபிக்கும் ப்ரஹ்மஸூத்ரங்கள் க்ருஷ்ணனென்னும் அம்ருதஸமுத்ரத்தில் த்ருஷ்ணையைப் பெருக்குகின்றன என்று ஸாராவளியில் பேசியுளது. மஹர்ஷியின் ஸூத்ரங்களே அப்படி க்ருஷ்ண த்ருஷ்ணையைப் பெருக்கும்பொழுது, ப்ரியதமையான பெண்கவியின் ப்ரபந்தங்கள் க்ருஷ்ணத்ருஷ்ணையைச் சூழ்ந்ததனிற் பெரியதாகப் பெருக்குவதில் என்ன ஸந்தேஹம்? க்ருஷ்ணன் ஒருவனிடத்திலேயே உன் ஸரஸ்வதி அந்விதம். பூமிப்பிராட்டி கோதை. 'யத் க்ருஷ்ணம் தத் அந்நஸ்ய' என்பது வேதம். பூமியின் வர்ணம் கருப்பு (க்ருஷணம்). யமுனை நீரும் க்ருஷ்ணவர்ணம். க்ருஷ்ண வர்ணதத்வம் கோதைக்கே.

யமுநாநுபாவம்— க்ருஷ்ணஸம்பந்தத்தால் 'தூயபெருநீர் யமுனையின்' பெருமையுளது உன்னுடைய ஸரஸ்வதி. க்ருஷ்ணனுடைய யௌவநலீலைகள் க்ருஷ்ணாநதியிலும், அந்நதிக்கரையிலும் நிகழ்ந்தன. 'யமுநாஸாக்ஷிகயௌவநம் யுவாநம்'. யௌவன கேளிகைகளுக்கெல்லாம் யமுனை ஸாக்ஷி. 'அநுபாவம்' என்பது மனதிலமுங்கியிருக்கும் [illegible]த்தை ஸூசிக்கும் விகாரசேஷ்டைகளை [illegible] வேணுகா[illegible]

189897

